<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 134/2021**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>வாக்குமூலம் –பி.வா.சா. 1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபு | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 04.09.2025 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு செப்டம்பர் 04 ம் நாள் சாட்சியம்.

---

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. க.ச.எண்.3/4 இந்த வழக்கில் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். க.ச.எண்.3/4 ல் வாதி அனுபவிப்பதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் அந்த சொத்தில் பொது கிணற்றுக்கு செல்வதற்கான பாதை உள்ளது. அதைப் பொறுத்து எனக்கு ஆட்சேபணை உள்ளது. இந்த வாதியின் பாகத்தில் தான் பொதுக் கிணற்றுக்கு நான் செல்ல வேண்டும். அந்த பொது கிணற்றுக்கு என்னுடைய பாகத்தில் இருந்து கிழக்கே வாதியின் பாகத்திற்கு சென்று வடக்கே செல்ல வேண்டும். வாதியின் பூமிக்கு வடபுறம் கிழமேல் ரோடு உள்ளது. அதற்கு பிறகு அமராவதி ஆறு உள்ளது. அமராவதி ஆற்றில் நான் பைப் லைன் மூலம் தண்ணீர் எடுத்து வருகிறேன். அமராவதி ஆற்றில் நான் ஒரு மின் மோட்டார் பொருத்தியுள்ளேன். அந்தஅமராவதி ஆற்றின் மின் மோட்டாரின் எஸ்.சி.எண்.85 ஆகும். பொது கிணற்றில் வைக்கப்பட்டிருக்கும் மின் இணைப்பு எனக்கு தெரியாது. தற்போது அது பயன்பாட்டில் இல்லை.

2. பொது கிணற்றுக்கு அருகில் உள்ள மின் கம்பத்திலிருந்து மின் இணைப்பு எடுத்து வாதியின் பூமியின் வழியாக எனது போர்க்கு கொண்டு செல்கிறேன் என்றால் எனது போர்க்கு கொண்டு செல்கிறேன். நான் வாதியின் பூமியில் மின் இணைப்பு கொண்டு செல்ல சட்டப்படி உரிமையில்லை என்றால் நான் வாதியின் பூமியின் வழியாக மின் இணைப்பு கொண்டு செல்லவில்லை. க.ச.எண்.3/4 க்கான பட்டாவில் எனது பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். எனக்கு தடத்தில் அடிநில உரிமை இல்லாததால் பட்டாவில் இடம் பெறவில்லை என்றால் சரியல்ல. 1983 ம் ஆண்டு பாகப் பிரிவினை பத்திரத்தில் இடம் பெறாத சரத்துக்களை ஏற்படுத்தி புதியதாக நான் பதிவு செய்துள்ள ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பொதுத் தடம் என்பதில் பொது என்ற வார்த்தை 1983 ம் ஆவணத்தில் இல்லாத நிலையில் புதியதாக சேர்க்கப்பட்டுள்ளதால் அந்த பொது என்ற வார்த்தை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.